DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 67 /2022**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜசேகரன் | Father Name –பரமசிவம் | |
| Age | 58 | Village – | திருமலாபுரம் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025.

**வாதி தரப்பு முதல் விசாரணை.**

என் சார்பாக கீழ்காணும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 23.11.1951ம் தேதிய வழக்குரைச் சொத்தினைப் பொறுத்து வாதியின் தகப்பனார் பரமசிவ நாடார் மற்றும் கருப்பையா நாடார் ஆகியோர்களுக்கு சாமிகாளை நாடார் எழுதிக்கொடுத்த பாத்திய விடுதலை பத்திரம் சான்று நகல் வாசாஆ 1.

2. 26.04.2019ம் தேதிய வழக்குரைச் சொத்திற்கு போடிநாயக்கனூர் ஆணையர் கொடுத்த டவுன் சர்வே ரிஜிஸ்டர் அசல் வாசாஆ 2.

3. வழக்குரைச் சொத்திற்குரிய டவுன் சர்வே Land Extract கணினி நகல் வாசாஆ 3.

4. 29.04.2019ம் தேதிய வழக்குரைச் சொத்திற்கு போடிநாயக்கனூர் நகராட்சி நகர சார்ஆய்வாளர் கொடுத்த வரைபடம் அசல் வாசாஆ 4.

5. 11 09.2020ம் தேதிய வழக்குரைச் சொத்தைப் பொறுத்து வாதியும், வாதியின் மக்களான V.P.R சிவசூர்யா, V.P.R.சக்திவேல் ஆகியோர்கள் எழுதிக்கொண்ட பாக விஸ்தி பத்திரம் அசல் வாசாஆ 5.

6. 17.02.2020ம் தேதிய வழக்குரைச் சொத்தில் உள்ள குழாய் இணைப்பிற்கு வாதி செலுத்திய தண்ணீர் கட்டண ரசீது அசல் வாசாஆ 6.

7. 13.05.2020ம் தேதிய வழக்குரைச் சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு வாதி செலுத்திய மின் கட்டண ரசீது அசல் வாசாஆ 7.

8. 07.10.2020 ம் தேதிய வாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Os No.69/2020 ன் வழக்குரை அலுவலக நகல் வாசாஆ 8.

9. 01.09.2020 ம் தேதிய பிரதிவாதிகளுக்கு போடிநாயக்கனூர் நகராட்சி சர்வே எண்.268/1 ற்கு கொடுத்த கட்டிட அனுமதி உத்தரவு கணினி நகல் வாசாஆ 9.

10. 20.10.2023 ம் தேதி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை அசல் **நீமசாஆ 1.**

11. 21.01.2025 அன்று நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை அசல் **நீமசாஆ 2.**

12. 21.01.2025 அன்று நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் அசல் **நீமசாஆ 3.**

13. நகர சார் ஆய்வாளர் கொடுத்த வரைபடம்(எண்ணம் 2) அசல் **நீமசாஆ 4**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் குடியிருக்கும் வீடு தற்போது நாடார் சந்து கதவு எண்.6/எ, உரிமையாளர் லதா என்பவரின் வீட்டில் மாடியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டில் குடியிருக்கும் முன்பாக பட்டாளம்மன் கோவில் தெரு, கதவு எண் 19 ல் சரவணன் என்பவரின் வீட்டில் குடியிருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் எனது தாத்தா வீரியப்பெருமாள்நாடாருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், வழக்குரைச் சொத்து எனது தாத்தா வீரியப்பெருமாள்நாடாரின் தந்தை சாமிக்காளைநாடாருக்கு சொந்தமானது. வழக்குரைச் சொத்தானது சாமிக்காளைநாடாருக்கு பாத்தியப்பட்டது என்றும், வீரியப்பெருமாள்நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றும் நிரூபணம் செய்ய இந்நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி சரியாக தெரியவில்லை. சாமிக்காளைநாடாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் வீரியப்பெருமாள்நாடார், மற்றும் சாமிமுத்துநாடார் ஆகியோர் ஆவார். வீரியப்பெருமாள்நாடாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள் ஆவார்கள். 1. கருப்பையநாடார், 2. சாமிக்காளைநாடார் 3. பவளத்தாயம்மாள் 4. பரமசிவநாடார் ஆகியோர் ஆவார்.

என்னுடைய வழக்குரையில் வீரியப்பெருமாள்நாடாருக்கு 1. கருப்பையநாடார், 2. சாமிக்காளைநாடார் 3. பரமசிவநாடார் என்ற 3 வாரிசுகள் மட்டும் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். பவளத்தாயம்மாள் பெண் வாரிசு என்பதால் காண்பிக்கவில்லை. கருப்பையாநாடாரின் பேரன் தான் 2 வது பிரதிவாதி இளங்கோ என்றால் சரிதான். மேற்படி கருப்பையாநாடாருக்கு 7 பிள்ளைகள் என்று என்னிடம் காட்டப்படும் பிரதிவாதிகள் தாக்கல் செய்த கொடிவழி ஜாபிதாவில் சொல்லப்பட்டுள்ள விவரம் சரிதான். மேற்படி சாமிக்காளைநாடாருக்கு 7 பிள்ளைகள் என்று என்னிடம் காட்டப்படும் பிரதிவாதிகள் தாக்கல் செய்த கொடிவழி ஜாபிதாவில் சொல்லப்பட்டுள்ள விவரம் சரிதான். மேற்படி பரமசிவநாடாருக்கு 6 பிள்ளைகள் என்று என்னிடம் காட்டப்படும் பிரதிவாதிகள் தாக்கல் செய்த கொடிவழி ஜாபிதாவில் சொல்லப்பட்டுள்ள விவரம் சரிதான். பரமசிவநாடாருக்கு நான் 6 வது பிள்ளை என்றால் சரிதான். பவளத்தாயம்மாளுக்கு பிறந்த மகன் தான் SSK.சௌந்தர்ராஜ் என்றால் சரிதான்.

2. வழக்குரைச் சொத்து எங்களுடைய பூர்வீக சொத்து என்பதை காண்பிக்க கொடிவழி ஜாபிதா ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் பரிகாரம் கோரும் வழக்குரைச் சொத்து சர்வே எண்.265 மற்றும் 268 ல் உள்ளது என்றால் சர்வே எண்.268 ல் மட்டும் தான் பரிகாரம் கோரியுள்ளேன். வழக்குரைச் சொத்து சர்வே எண்.265 ல் இல்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக, 2 வருடங்களுக்கு முன்பு இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு – 69/2020 யை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அசல் வழக்கில் என்னுடைய வழக்கின் உண்மைத்தன்மையை சொல்லியுள்ளேன் என்றால் முழுவிவரங்கள் குறித்து சொல்லவில்லை. அசல் வழக்கு – 69/2020 யை இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசல் வழக்கு – 69/2020 ல் பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு – 69/2020 வழக்கு

இந்நீதிமன்றத்தில் 2 வருடம் நடைபெற்றது என்றால் சரிதான். அசல் வழக்கு – 69/2020 ஆனது விசாரணைக்கு வரும் நேரத்தில் நான் திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அசல் வழக்கு – 69/2020 ல் தாக்கல் செய்த Not press memo என்றால் சரிதான். **அசல் வழக்கு எண். 69/2020 ல் வாதி தாக்கல் செய்த Not press memo பிவாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேற்படி வழக்கை 2 ஆண்டுகள் கழித்து வாபஸ் பெறுவதற்கான காரணம் ஏதும் பிவாசாஆ 1ல் சொல்லியுள்ளேனா என்றால் காரணம் சொல்லவில்லை. பிரதிவாதி மீது மீண்டும் வழக்கு தாக்கல் செய்ய இந்நீதிமன்றத்தில் இருந்து அனுமதி ஏதும் பெற்றுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 வருடம் கழித்து 19.04.2022 அன்று தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 1 வருட இடைப்பட்ட காலத்தில் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்ய சட்ட அறிவிப்பு ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. அசல் வழக்கு – 69/2020 தாக்கல் செய்யும்போது 11.09.2020 அன்று பிரதிவாதிகள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பழைய வழக்கறிஞரின் தவறான அறிவுறுத்தலால் மேற்படி புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் பிரதிவாதி மீது கொடுத்த புகார் என்றால் சரிதான். **வாதி போடிநாயக்கனூர் நகர் காவல்நிலையத்தில் 20.09.2020 அன்று பிரதிவாதிகள் மீது கொடுத்த புகாரின் நகல் பிவாசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேற்படி புகாரின் அடிப்படையில் தான் அசல் வழக்கு – 69/2020 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரே தவறுதலாக கொடுக்கப்பட்டதால் தான் மேற்படி வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டேன். அந்த புகாரில் சொல்லியுள்ளது போல் பிரதிவாதிகள் என்னுடைய நிலத்தை கடப்பாறையால் இடிக்கவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு – 69/2020 வழக்குரையில் பத்தி 4 ல் " K.சௌந்திரராஜன் என்பவரிடமிருந்து தகுந்த பிரதி பிரயோஜனத்திற்கு கடந்த 12.09.1988 ம் தேதி போடிநாயக்கனூர் சார்பதிவக

ஆவண எண்.1703/1988 நம்பர் கிரையப்பத்திரன்படி கிரையம் பெற்று, எனது தனித்த சுவாதீனத்தில் வைத்து குடும்பத்துடன் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் " என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது நாங்கள் வாங்கிய கிரையப்பத்திரன் நகல் என்றால் சரிதான்.

**5.** அசல் வழக்கு – 69/2020ல் சொல்லியுள்ள கிரையப்பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணம் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்தால் எனக்கு பாதிப்பு ஏற்படும் என்று திட்டமிட்டு அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ 2 புகாரில் நான் கிரையம் பெற்ற வீடு சர்வே எண்.265/1 மற்றும் 268/2ல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தை 06.03.1936ம் தேதியில் கார்மேகநாடாரிடமிருந்து, SS.குழந்தைவேல்நாடார் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்னால் உள்ள மூல பத்திரம் 06.03.1936 பத்திரம் தான் என்றால் சரிதான். அந்த பத்திரத்திற்கு முன்பாக 1925ம் வருட ஆவணம் உள்ளது. 1925ம் வருட ஆவணத்தில் சாமிநாடார், சாமிக்காளைநாடார் மகன், திருமலாபுரம் என சாட்சிக் கையொப்பம் செய்துள்ளார். 06.03.1936 மற்றும் 1925 ஆகிய 2 ஆவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் கிரையம் வாங்கிய 1988ம் வருட கிரைய ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

6. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 7 ல் உள்ள மின் இணைப்பிற்கு எத்தனை வருடங்களாக மின் கட்டணம் செலுத்திவருகிறேன் என்றால் நான் சுமார் 30 வருடங்களாக மின் கட்டணம் செலுத்தி வருகிறேன். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 6 உள்ள எண்ணிற்கு நான் எத்தனை வருடங்களாக குழாய் வரி கட்டி வருகிறேன் என்றால் சரியாக தெரியவில்லை. என்னுடைய அப்பா முதலில் கட்டி வந்தார், அதன்பின் நான்

கட்டி வருகிறேன். என் தகப்பனார் 21.01.1994 அன்று காலமானார் என்றால் சரிதான். என் தகப்பனார் காலமான சமயத்தில் என் பெயரில் ஏதேனும் ஆவணம் எழுதிவைத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா வீரியப்பெருமாள்நாடார் என் பெயரில் ஏதேனும் ஆவணம் எழுதிவைத்துள்ளாரா என்றால் என் தாத்தா வீரியப்பெருமாள்நாடார் எழுதிவைத்த ஆவணங்கள் அனைத்தும் எனது பெரியப்பா வசம் உள்ளதால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது.

7. பரமசிவநாடார் மக்கள் 1. வள்ளியம்மாள் 2. புஷ்பகாந்தி 3. சந்திரா 4. இந்திராணி 5 கிருஷ்ணவேணி ஆகியோர் என் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி என் சகோதரிகள் எனக்கு ஆவணம் ஏதும் எழுதி வைத்துள்ளார்களா என்றால் எழுதிவைக்கவில்லை. எனது தந்தையோ, தாத்தாவோ, என் சகோதரிகளோ எனக்கு எந்த ஆவணங்களும் எழுதி தரவில்லை என்றும் அதை மறைத்து எனது 2 மகன்களுக்கு நானே வாசாஆ 5 பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரிகள் வாய்மொழியாக வழக்கில் சொல்லியுள்ள வீட்டை என்னிடமே வைத்துக்கொள்ளுமாறு ஒப்படைத்துவிட்டார்கள். நான் குடியிருந்த வீட்டை நானே வைத்துக்கொள்ளும்படி என்னுடைய சகோதரிகள் சொன்னார்களா என்றால் சரிதான். அந்த வீடு என்னுடைய அனுபவத்தில் உள்ளது ஆனால் நான் அதில் குடியிருக்கவில்லை. வேறு வீட்டில் குடியிருக்கிறேன். நான் குடியிருக்கும் வீட்டில் பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததால் தான் OS No.69/2020 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் குடியிருக்கும் வீட்டிற்கு அருகே உள்ள காலியிடத்திற்கு தான் பிரச்சனை ஏற்பட்டது.

8. நான் வாசாஆ 5 பத்திரம் பதியும் போது அந்த பத்திரத்தில் 997 ¼ சதுர அடி உள்ள காலிமனையிடம் என்று தான் பத்திரம் பதிந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 997 ¼ சதுர அடி காலிமனையிடத்திற்காக தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த காலிமனையிடத்திற்கும் வாசாஆ 6, வாசாஆ 7 ஆவணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால்

சரிதான்.

( பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி 02.09.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது)

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2025.08.21 16:45:29 +0530

District Munsif,
Bodinayakanur.